பாடம்-12

## இயேசுவின் சபை

இயேசு கிறிஸ்து தான் உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள் சென்ற பின்பு பரலோகத்திற்குச் சென்றார். ஆனால் அப்பொழுது தான் அவரது இரட்சிப்பின் ஊழியம் ஆரம்பமாயிற்று. அவர் தமது சபையை (மத் 16:18 ). ஸ்தாபனம் செய்வதில் தான் தெரிந்தெடுத்த அப்போஸ்தலர்களைக் பயன்படுத்தினார். தான் பரமேறிச் சென்றவுடன் அப்போஸ்தலர்கட்டு உதவியாக பரிசுத்த ஆவியான வரை அனுப்பினார்.

அப்போஸ்தலர் 2ம் அதிகாரம் (முதல் நூற்றாண்டு) சபையின் ஆரம்பத்தைப் பற்றிக் கூறுகிறது. அந்த நாளில் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று இயேசவின் சபையில் அங்கமாயினர். அன்று தான் சபை ஆரம்பமாயிற்று. ஏறத்தாழ கி.பி முப்பது ஆண்டுகளில் சுவிஷேம் உலகிலுள்ள அனைத்து சிருஷ்டிகட்கும் பிரசங்கிக்கப்பட்டு விட்டது. (கொ 12:3) யோவான் ஸ்நானகன், இயேசு, அப்போஸ்தலர் அனைவரும் “**ராஜ்யம் வரப்போகிறது**” என்று பிரசங்கித்தனர். (மத் 3:2,4,17;10:7) தனது அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பெந்தகோஸ்தே நாளில் சபையாகிய ராஜ்யம் வந்து விட்டது.

சபையைப் பற்றி நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இயேசு அதை ஆரம்பித்தார். எந்த மனுஷனும் அதை மாற்றி அமைக்கக் கூடாது என்று கட்டளையும் கொடுத்தார். (கலா 1:8:9; யோ 9-11; வெளி 22:18,19)

இயேசு ஸ்தாபித்த போது சபை எப்படியிருந்தது என்பதை தெரிந்துகொள்ளுவோமாயின், சபை இன்று எப்படியிருக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்வோம். இயேசு தனது சபையை ஸ்தாபித்த பின்பு மனிதர்களும் வெவ்வேறு சபைகளை காலப்போக்கில் உருவாக்கிவிட்டனர். ஆகையால் சபையைப்பற்றி நாம் நன்கு கற்று கொண்டால் தான் இயேசு உருவாக்கிய சபைக்கும் மனிதர்கள் உண்டாக்கிய சபைகளுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைக் காண முடியும்.

கீழே கொடுக்கப்பட்டடுள்ள அட்டவணை இயேசுவின் சபையைக் குறித்துக் தெரிந்து கொள்ள பெரிதும் உதவி செய்யும்.

**சபை**

| | | |
|---|---|---|
| ஸ்தாபர் | - | இயேசு |
| ஸ்தாபிக்கப்பட்ட வருடம் | - | கி.பி 33 |
| ஆரம்பிக்கப்பட்ட இடம் | - | எருசேலம் |
| தலைவர் | - | கிறிஸ்து |

ஸ்தாபனம் அல்லது அமைப்பு முறை - ஒவ்வொரு பிராந்திய சபையும் சுய ஆதிக்கமுடையது. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள் இருந்தனர். இந்த சபைக்கு பூமியில் தலைமை ஸ்தாபனம் கிடையாது.

## ஆராதனை முறை

ஜெபித்தல் பாட்டு பாடுதல், பிரசங்கித்தல், காணிக்கை கொடுத்தல், ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல்.

## அங்கத்தினர்களாகும் முறை

இயேசுவை விசுவாசித்து மனந்திரும்பி இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டு பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றவர்களே சபையில் அங்கத்தினராக முடியும்.

இயேசுவால் ஸதாபிக்கப்பட்ட இந்த சபையை குறித்து நீங்கள் நன்கு அறிய வேண்டுமானால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். இன்று கோடிக்கணக்கானவர்கள் உலகில் இயேசுவின் சபையில் அங்கமாயிருக்கிறார்கள் இவர்களே இன்று இயேசுவின் சபையாராக இருக்கின்றனர். நீங்கள் எந்த சபையிலும் அங்கமாவதற்கு முன்பு கீழ்காணும் கேள்விகளைக் கேளுங்கள்.